**கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை**
**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை - ஆண்டு IV, 2017**

**கம்பனிச் சட்டம்**

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

1. நியதிச்சட்ட வாசகங்களை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விமர்ச்சித்து மதிப்பிடப்பட்ட காரணங்களைத் தந்து விடை தருக:

   (i) 200 மில்லியன் ரூபா பெறுமதியுடைய ஆதனமொன்றினை விற்றதைத் தொடர்ந்து X plc என்பதன் சொத்துக்களின் நிகர பெறுமதியானது 700 மில்லியன் ரூபாவிற்கு வீழ்ச்சியடைந்தது. கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபாவாகும்.

   என்ன சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?

   (ii) A Ltd என்பது தான் B (pvt) Ltd என்பதனுடன் ஒன்றிணைக்கப்பட உள்ளமைக்கான தீர்மானமொன்றினை நிறைவேற்றுவதற்கு முன்மொழிவு செய்வதான அறிவித்தலைப் பங்குதாரருக்கு அனுப்பியது. A Ltd ன் பங்குதாரரும் பங்குதாரர் வினைத்திட்பக் கோட்பாடுடைய ஒருவருமான C என்பவர் கடந்த காலத்தில் B (pvt) Ltd இன் நடவடிக்கைகள் சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களைத் தெரிவித்திருந்ததோடு தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களித்தார். தீர்மானமானது 76% வாக்குகளை சாதகமாகப் பெற்றது.

   Cக்கு உமது ஆலோசனை என்ன?

   (iii) G (pvt) Ltd என்பது கடனுக்குள்ளாகியதுடன் அதன் வியாபார நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டது. A மற்றும் B ஆகியோர் கம்பனியின் பாதுகாக்கப் படாத கடன்காரராவர். J plc என்பது G (pvt) Ltd இன் வியாபாரத்தினைக் கொள்வனவு செய்வதற்குப் பிரேரிப்பதுடன் பாதுகாக்கப்படாத கடன்களை முழுமையாகச் செலுத்தப் பட்ட பங்குகளாக மாற்றுவற்கான சிபாரிசினையும் முன்வைக்கின்றது.

   A, B ஆகியோருக்கு உமது ஆலோசனை என்ன?

2. (i) தனிப்பட்ட கடப்பாடு காரணமாக இலங்கையின் வர்த்தகர்கள் பங்குடமைகளை உருவாக்குவதற்குத் தயங்குகின்றனர். இங்கிலாந்திலிருப்பது போல வரையறுக்கப்பட்ட கடப்பாடுடைய பங்குடமையை அறிமுகஞ் செய்தல் இப்பிரச்சனையைத் தீர்க்கும் என்பதனுடன் வியாபார அபிவிருத்திக்கும் அது வழிவகுக்கும்.

பொருத்தமான ஆதாரங்களைக் மேற்கோள் காட்டுவதன் மூலம் மேற்போந்த கூற்றினை விமர்ச்சித்து மதிப்பிடுக.

(ii) சிது, மீனா மற்றும் ராமா ஆகியோர் கணக்கியல் வியாபரம் செய்வதான பங்குடமையொன்றினை நடாத்திக் கொண்டிருந்தனர். கணக்குப் பரிசோதனையொன்றின் போது பங்குடமையின் லாபமானது பெருமளவு வீழ்ச்சியடைந்ததை சிதுவும் மீனாவும் கண்டு கொண்டனர். வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தினை ராமா பங்குடமைக் கணக்கில் செலுத்தவில்லையென்பதையும், பதிலாக, அப்பணத்தினை அவன் தனது தனிப்பட்ட கடனைத் தீர்ப்பதற்காகப் பாவித்திருந்தனென்பதையும் விசாரணையின் போது அவர்கள் கண்டு பிடித்தனர். மேலும், புதிதாகப் பட்டயக் கணக்காளர் பரீட்சையில் சித்தியடைந்தவனான ராமாவின் மகனால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கியல் நிறுவனமொன்றில் ராமா பங்காளரென்பதையும் சிதுவும் மீனாவும் கண்டு பிடித்தனர்.

மேற்கூறப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலான சட்ட விடயங்களையும், பங்காளர்களின் உரிமைகள் கடமைகளையும் பொருத்தமான ஆதாரங்களைத் தந்து ஆராய்க.

3. Safe Builders PLC என்பது கட்டிட நிர்மாண வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தது. கம்பனியின் இயக்குனர் சபையிலிருந்த நான்கு பேரில் மூன்று பேர் எப்போதும் வெளி நாட்டிலிருந்ததுடன் உள்நாட்டிலிருந்தவள் ரோஸி என்பவளாவாள். பட்டய கட்டிடக் கலைஞரும் பிரதான நிர்வாக உத்தியோகத்தருமான மிலான் என்பவனிடம் எல்லா கட்டுமானப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

இலங்கையினதும் இங்கிலாந்தினதும் நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமைகள் மற்றும் கடப்பாடுகளை ஆராய்க:

(i) (அ) கம்பனிக்குச் சொந்தமான கனரக வாகனமொன்று தேவைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி மணல் கொண்டு சென்றமைக்காகப் பொலிஸாரால் தடுத்து வைக்கப் பட்டிருந்தது.

(ஆ) இரண்டு வருடங்களுக்கு முன்னர் கம்பனியினால் நிர்மானிக்கப்பட்ட அடுக்குமாடித் தொகுதியொன்றில் பாவிக்கப்பட்ட பொருட்கள் தரம் குறைந்தவை என்பதான முறைப்பாடுகள் குடியிருப்பாளர்களினால் வழங்கப் பட்டிருந்தது.

(ii) கம்பனியின் கட்டிட நிர்மான வேலைத்தளமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த கட்டுமான வேலையாள் ஒருவன் ஆறாம் மாடியிலிருந்து விழுந்து தலையிலேற்பட்ட காயங்களினால் இறந்தான். கட்டுமானப் பணியாட்களுக்குக் கம்பனியானது தலைக்கவசங்களையோ பாதுகாப்புப்

பட்டிகளையோ வழங்கியிருக்கவில்லையென்பது விசாரணைகளில் வெளி வந்தது.

4. Silverline Finance plc என்பது கணிசமானளவு லாபமீட்டுகின்ற வளமுள்ள கம்பனியொன்றாகும். எனினும் கம்பனியானது ஆரம்பத்திலிருந்தே பங்குலாபம் வழங்கியிருக்கவில்லை. புதிய செயற்திட்டமொன்றைக் கம்பனி ஆரம்பித்ததுடன் அதற்காகக் காணியொன்றும் கொள்வனவு செய்யப் பட்டது. புதிய முயற்சியின் கீழ் மதுபானத் தொழிற்சாலை மற்றும் காட்சியறைக்கான கட்டிட நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(i) மேற்போந்த சம்பவத்தில் எழுந்ததான சட்ட விடயங்களை ஆராய்க.

(ii) புதிய முயற்சியினைப் பங்குதாரர் எதிர்க்க முடியுமா?

(iii) புதிய முயற்சியினை அப்பகுதியின் மக்கள் எதிர்க்க முடியுமா?

(iv) மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களுக்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாக்கப் பட முடியுமா?

மேலே கேட்கப் பட்டவைக்கான உமது விடையானது 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பொருத்தமான வாசகங்கள், கம்பனிச் சட்டக் கருத்தேற்புக்கள் மற்றும் தீர்ப்புச் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

5. "கம்பனியின் நல்லாட்சி (Corporate Governance) என்பது பொருளாதார மற்றும் சமூகக் குறிக்கோள்களுக்கு மத்தியிலும், மேலும் தனிப்பட்ட மற்றும் பொதுக் குறிக்கோள்களுக்கு மத்தியிலும் சமநிலை பேணப்பட வேண்டுமென்பதில் அக்கறையுள்ளவொன்றாகும். அதனால் நல்லாட்சி வடிவமைப்பானது வளங்களைச் சிறந்த முறையில் பாவிக்க வேண்டுமென்பதை ஊக்குவிக்கும் அதே அளவிற்கு அவ்வளங்களின் செயன்முகாமை தொடர்பில் கணக்குக் காட்டப்பட வேண்டுமென்பதையும் தேவைப் படுத்துகின்றது. நோக்கமானது கிட்டத்தட்ட தனிநபர், கம்பனிகள் மற்றும் சமுதாயத்தை ஒருவழிப்படுத்துவதாகும்."

மேற்போந்த கூற்றினை விமர்ச்சித்து மதிப்பிடுக.

6. ஆதன விற்பனையாளரான டேவிட் என்பவன் Best House Dealers Ltd (BHD) என அழைக்கப் படுவதான கம்பனியொன்றினைக் கூட்டிணைக்கும் பொருட்டு சமன் மற்றும் அன்டன் ஆகியோரை ஈடுபடுத்தியிருந்தான். சமனும் அன்டனும் கம்பனியின் கூட்டிணைப்பிற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்த போதிலும் டேவிட் அதில் ஈடுபடவில்லை. மூவரும் BHD யின் பணிப்பாளர்களாகினர். கூட்டிணைப்பின் பின் உடனடியாக BHD ஆனது 'மிரிஸ்வத்த' எனும் காணியை டேவிட்டிடமிருந்து 100 மில்லியன் ரூபாவிற்கு

வீட்டுத்திட்டம் ஒன்றிற்காகக் கொள்வனவு செய்தது. BHD கூட்டிணைக்கப் படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்னர் டேவிட் அவ்வாதனத்தினை 95 மில்லியன் ரூபாவிற்குக் கொள்வனவு செய்திருந்ததுடன் மேலும் 3 மில்லியன் ரூபா விலைக்கழிவு பெற்றுமிருந்தான். அவன் பணிப்பாளர் சபைக்கு 8 மில்லியன் லாபத்தினைத் வெளிப்படுத்தியிருந்தான். BHD பொதுமக்களுக்குப் பங்குகளை விநியோகித்ததுடன் கம்பனியினால் வெளியிடப்பட்ட முற்பகர்வானது டேவிட் 'மிரிஸ்வத்த'வை 95 மில்லியன் ரூபாவிற்குக் கொள்வனவு செய்திருந்ததாக வெளிப்படுத்தியது. 'மிரிஸ்வத்த'வைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் 'மிரிஸ்வத்த'வில் எந்த வர்த்தகம் தொடர்பான அபிவிருத்தியையும் மேற்கொள்ளக் கூடாதெனும் அறிவுறுத்தல் டேவிட்டிற்கு சம்பந்தப்பட்ட மாகாண சபை அதிகாரிகளினால் வழங்கப் பட்டிருந்தது. இத் தகவலை டேவிட் BHDக்கு அறிவித்திருக்கவில்லை.

(i) டேவிட் BHDக்கு ஆற்ற வேண்டிய சட்டக் கடமைகளையும், BHDஉக்கும் அதன் பங்குதாரருக்கும் டேவிட்டுக்கெதிராக காணப்படுகின்றதான குறைதீர்ப்புக்களையும் நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு நுணித்தாராய்க.

(ii) வீட்டுத் திட்டம் சம்பந்தமாக, பணிப்பாளர்களின் லாப எதிர்வுகூறல் உள்ளடங்கியிருந்த முற்பகர்வொன்றினை BHD வெளியிட்டதெனவும் முற்பகர்வில் காணப்பட்டதான கூற்றுக்களில் தங்கியிருந்து டயஸ் என்பவன் BHDயின் பங்குகளைக் கொள்வனவு செய்தானெனவும் அனுமானிக்க. இப்போது அவன் சட்ட நடவடிக்கை எடுக்க விரும்புகிறான்.

BHDயின் கடப்பாடுகளையும் டயஸின் உரிமைகளையும் நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

7. '2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டமானது பங்குதாரருக்கு மிதமிஞ்சிய உரிமைகளை ஏற்பாடு செய்துள்ளது. கிடைக்கக்கூடிய உரிமைகளைப் பயன்படுத்துவதில் பொதுவாகப் பங்குதாரர் அக்கறை கொள்ளாததனால் தவறானது அவர்களிடமேயே உள்ளது. எனினும், கடைசியில் அவர்கள் தமக்குப் போதியளவான பாதுகாப்பு சட்டத்தினால் வழங்கப்படவில்லையெனக் குறை கூறுவது வழக்கம்.'

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? நியதிச்சட்ட வாசகங்கள், தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நடைமுறை எடுத்துக்காட்டுக்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு விமர்ச்சித்து மதிப்பிடப்பட்ட காரணங்களைத் தருக.

*